முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை திரு. E.. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 நாள், வியாழக்கிழமை

EP.No.12/2020
இன்
OS No.459/2009
-----

அமுதா ... மனுதாரர்/ வாதி

/ எதிர்/

1) சுந்தரக்குமார் (இறப்பு)
2) சீதாலெட்சுமி
3) சந்திரமூர்த்தி
4) விஜயலெட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 22.09.2025ம் தேதி என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் கட்டளை 21 விதி 32 சி.பி.சி படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

தாவா 1, 2ம் இலக்க சொத்தில் உள்ளடக்கிய 3வது இலக்க சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்து எழுப்பியுள்ள வாதி வீட்டின் வடபுறம் கிழமேல் ஜன்னலை ஒட்டி எழுப்பியுள்ள கட்டுமானத்தையும், தென்வடல் கீழ்புறம் எழுப்பியுள்ள (நீ.ம.சா.ஆ.1–ல் குறிப்பிட்டுள்ள BIKCB பகுதி) சுவரையும் இடித்து அப்புறப்படுத்த வேண்டும் எனவும் தவறும், பட்சத்தில் நீதிமன்ற அமீன் மூலம் மேற்படி செயலுறுத்துக் கட்டளையினை நிறைவேற்றம் செய்து உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, அதை 2, 4 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டு, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி ஆட்சேபணை செய்துள்ளார்கள்.

4. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**தீர்மானிக்க வேண்டிய விசயம் :**

5. இந்த மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு :**

6. இந்த மனுவில், நீதிமன்றத்தின் ஒப்படைப்பு உத்தரவின் மூலம், வழக்கு சொத்தின் உரிமையை பிரதிவாதிகளிடமிருந்து மனுதாரருக்கு வழங்க உத்தரவிட வேண்டி இந்த மனுவானது கட்டளை 21 விதி 32

உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், OS No.459/2009 வழக்கில் மனுதாரர்/வாதிக்கு சாதகமாக 29.11.2019 அன்று தீர்ப்பாகி, மேற்படி தீர்ப்பில் தாவா இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை இடிக்க உத்தரவாகியிருக்கிறது ஆனால், பிரதிவாதிகள் இதுவரை ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை என வாதி தரப்பில் நீதிமன்றத்தின் ஒப்படைப்பு உத்தரவின் மூலம், வழக்கு சொத்தின் உரிமையை பிரதிவாதிகளிடமிருந்து மனுதாரருக்கு வழங்க உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மேலும், அசல் வழக்கு 2009ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுதல் மனு 2020 ஆம் ஆண்டிலேயே தாக்கல் செய்யப்பட்டு 5 ஆண்டுகள் நிலுவையில் இருக்கிறது. இந்நிலையில், திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள AS No.17/2020ல் இறுதி தீர்ப்பு வரும் வரை நிறைவேறுதல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க இடைக்கால (Stay) உத்தரவு வழங்க வேண்டி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள IA No.2/25 மனு இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டியது சட்டப்படியானதாகும். அசல் வழக்கில் வழங்கிய தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை சரியான காரணமின்றி நிறைவேற்றல் நீதிமன்றம் நிறுத்தி வைக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவை நிறுத்தி வைக்க வேண்டி Stay உத்தரவு எதுவும் நிலுவையில் இல்லை என்பதை கருத்தில் கொண்டும், அதன்படி மனுதாரருக்கு நிறைவேற்று மனுவில் கண்ட மனுச்சொத்தை பிரதிவாதிகள் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இந்த மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனு அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 25.09.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.25 13:34:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

**இணைப்பு** :

1. **மனுதாரர் தரப்பு சாட்சி** :இல்லை
2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.25 13:34:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

E.P.No.12/2020
in
OS.No.459/2009
Order
D.D. 25.09.2025